## 1.1 அபிப்பிராயம்

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

-

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறைவு செய்யப்பட்ட 14 செயற்திட்டங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 9,490,550 கூட்டுத்தொகை 2020 மே 31 ஆந்திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 14 செயற்திட்டங்களினுள் 2019 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட்ட ரூபா 940,350 பெறுமதியான 02 செயற்திட்டங்களையும் பிடிகாசும் பழைய இரண்டு செயற்திட்டங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 973,760 மற்றும் ரூபா 4,644,560 தொகையான 06 செயற்திட்டங்களின் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் முன்எடுக்கப்படுகின்றன. | செயற்திட்டம் நிறைவு செய்தவுடன் உடனபடியாக பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறானது ரூபா 11,359,788 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 10,629,776 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 21,989,564 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியானது நிர்வாக செலவினம் ரூபா 30,342,983 இனால் அதிகரித்திருந்தமை மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 3,830,652 இனால் குறைவடைந்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களுக்காக ஆண்டினுள் 42 அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்ட போதிலும், பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 28 மாத்திரம் ஆகும். அவற்றிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 166,582 ஆகும். ஆண்டின் ஆரம்பத்தில் 63 அனுமதிப்பத்திரம் பெற்றோர் இருந்த போதிலும், ஆண்டினுள் புதுப்பிப்பதற்காக 28 அனுமதிப்பத்திரங்கள் மாத்திரமே முன்வைக்கப்பட்டிரந்தன. அவற்றிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 194,200 ஆகும். எவ்வாறெனினும் நிலையத்தின் அனுமதிப் பத்திரம் வழங்குதல், புதுப்பித்தல் ஆகியவற்றின் நடைமுறையினை பகுப்பாய்வு செய்யும் போது அறிமுகப்படுத்தப்பட்ட பெரும்பாலான தொழில் நுட்பங்கள் நாட்டின் போதியளவில் பிரபல்யப்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 42 தொழில்நுட்பஒப்படைப்புக்களை மேற்கொள்ள உத்தேசித்திருந்த போதிலும், தொழில் நுட்பத்தினை பெற்றுக் கொள்வதற்கு முன் வந்திருந்தது 28 தொழில் முயற்சியாளர்கள் என்பதால், முயற்சியாளர்களிடமிருந்து கிடைத்த வரவேற்பானது மிகவும் குறைவாக காணப்பட்டது. சில தொழில்நுட்பங்கள் இன்றளவிலும் செல்லுபடியான காலம் கடந்துள்ளமையினால் அந்த தொழில்நுட்பங்களுக்குரிய புதுப்பிப்பது தொடர்பில் ஆர்வம் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட தொழில்நுட்பங்கள் காலத்திற்கு காலம் முன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதுடன் அந்த தொழில்நுட்பங்களை சமூகமயப் படுத்துவதற்குநடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. அவ்வாறே அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தலின் செயன் முன்னேற்றத்தினை பின்தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிலையத்தினால் ஆண்டினுள் 08 தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், அவ்வருடத்தில் ரூபா 2,449,157 கிரயமான 04 தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் மாத்திரம் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தன. அந்த தொழில்நுட்பங்கள் தொடர்பிலும் பேடன் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்தது ஒரு உபகரணத்திற்கு மாத்திரமே ஆகும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 08 தொழில்நுட்பங்கள் 2019 ஆம் ஆண்டினுள் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்ட போதிலும், அதற்குரிய செயல்திட்டங்கள் ஆண்டினுள் நிறைவு செய்ய முடியாமையினால் 04 தொழில்நுட்பங்களை மாத்திரம் அறிமுகப்படுத்த முடியுமாக இருந்தது. ஆராய்ச்சி செயல்திட்டங்களை திட்டமிட்ட முறையில் உரிய திகதியில் நிறைவு செய்வதற்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் முடியாது போகும். அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களுக்காக தொழில்நுட்ப ஒப்படைப்புக்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | நாளுக்கு நாள் புதிய தொழில்நுட்பங்கள் உருவாகின்ற மையினால் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களை செயற்திறனாக நிறைவு செய்ய வேண்டியதுடன் தொழில்நுட்ப ஒப்படைப்புக்களை துரிதப்படுத்த வேண்டும். |
| (இ) | 2010-2019 வரையிலும் 47 தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டின் போது அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு / புதுப்பிப்பதற்கு 24 தொழில்நுட்பங்கள் மாத்திரமே முன்வைக்கப்பட்டிருந்தன. | அதிக தேவைப்பாடு நிலவும் தொழில்நுட்பங்களுக்காக அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. | நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட தொழில்நுட்பங்கள் காலத்திற்கு காலம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதுடன் அந்த தொழில்நுட்பங்களை சமூக மயப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தன்னியக்க யோகட் நிரப்புதல் மற்றும் முத்திரையிடல் இயந்திரமொன்றினை உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்று 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி | இந்த இயந்திரமானது ஆராய்ச்சி பணிகளும் உள்ளடங்கலாகவே உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த நடைமுறையில் எதிர்பார்க்காத | செயற்திட்டத்திற்கான காலத்தினை தீர்மானிக்கும் போது நடைமுறை நிலைமைகளினை கருத்திற் கொண்டு நடைமுறைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவு செய்ய எதிர்பார்க்கப் பட்டிருந்ததுடன் அதன்மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 560,000 ஆகும். குறித்த காலத்தினுள் நிறைவு செய்ய முடியாத காரணத்தினால் செயற்திட்ட காலம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 மே கணக்காய்வுத் திகதி வரையிலும் ரூபா 711,891 ஆன கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப சிக்கல்கள் ஏற்பட்டதுடன் இதுவரையிலும் அவை நிவர்த்தி செய்யப்பட்டவாறு உள்ளன. இயந்திரத்தின் அனைத்து பிரதான பாகங்களும் பூர்திதி செய்யப்பட்டுள்ளன. இயந்திரத்தின் செயற்பாட்டு மட்டத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்கு சான்றுபடுத்திய பின்னர் அதனை கையளித்து எஞ்சிய பணத்தை பெற்றுக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான காலத்தினை செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட வேண்டும் என்பது மற்றும் செயற்திட்டத்தை துரிதமானக நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (ஆ) | 2014-2-2019 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட 28 தொழில்நுட்பங்களின் பேடன் அனுமதிப் பத்திரங்களுக்காக விண்ணப்பித்திருந்தது ரூபா 1,920,465 கிரயமான 02 தொழில்நுட்பங்களுக்கு மாத்திரம் ஆகும். | அனைத்து தொழில்நுட்பங்களுக்கும் பேடன் அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்ள முடியாது. அதன் பிரகாரம் பேடன அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள நான்கு தொழில்நுட்பங்களுக்கான விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், தொழில்நுட்பங்களுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்ட புதிய தொழில் நுட்பங்களுக்காக துரிதமாக பேடன் அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (இ) | ரூபா 25,845,838 மதிப்பிடப்பட்ட செலவினமுடைய Advance of Nerdc Cremator for Environmental Performance செயற்திட்டத்திற்காக 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் 07 மாதங்களில் | மயானத்தின் பணிகளில் குறைபாடுகள் (எரிப்பதற்கு பயன்படும் L.P வாயுவின் கிலோவின் அளவினைக் குறைத்தல், மயானத்தின் வாயிலின் செயற்பாட்டினை மேம்படுத்துதல்) எதிர்பார்த்த போதிலும், வெளிநாட:டு வழங்குனர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாத உருப்படிகளை மீண்டும் விலைக்கேள்வி கோர | செயற்திட்டத்திற்கான காலத்தினை தீர்மானிக்கும் போது நடைமுறை நிலைமைகளினை கருத்திற் கொண்டு நடைமுறைக்கு பொருத்தமான காலத்தினை செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பணிகளை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 யூலை 01 ஆந் திகதி திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நேர்ந்தமையினால் தாமதங்களின் காரணமாக செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும், இதுவரையிலும் நகர சபைக்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும், அத்துடன் பணத்தினை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | என்பது மற்றும் செயற்திட்டத்தை துரிதமானக நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (ஈ) | 2018 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தில் நிறைவு செய்ய வேண்டிய இந்த Smart pet bottle crushing machine உபகரணம் ரூபா 700,000 தொகைக்கு மதிப்பிடப்பட்ட போதிலும், தற்போது வரையிலும் ரூபா 1,053,007 ஆன செலவினம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. 2020 மார்ச் 31 ஆந் திகதி நீடிப்புச் செய்யப்பட்ட இதன் பௌதீக செயன் முன்னேற்றம் 63 சதவீதம் மாத்திரம் ஆகும். | செயற்திட்டத்தின் பணிகள் புதிய பொறியியளலாளர் ஒருவரின் கீழ் மீண்டும் ஆரம்பித்தல் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதிலான சிரமங்களின் அடிப்படையில் தாமதமாகியது. ஆரம்ப சேகரிப்பு பணிகள் மற்றும் இலத்திரனியல் கட்டமைப்பு முறைகள் ஆகியவற்றை பதிவேட்டிற்கு உட்படுத்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டத்திற்கான காலத்தினை தீர்மானிக்கும் போது நடைமுறை நிலைமைகளினை கருத்திற் கொண்டு நடைமுறைக்கு பொருத்தமான காலத்தினை செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட வேண்டும் என்பது மற்றும் செயற்திட்டத்தை துரிதமானக நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (உ) | 3 மாதங்களில் பணிகளை பூர்த்தி செய்வதற்கு 2015 ஏப்ரல் 27 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட Development of a Device to measure surface moisture of green tea leaves செயற்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 170,000 ஆன போதிலும், 2020 மே மாதம் வரையிலும் ரூபா 345,042 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டு 11 சந்தர்ப்பங்களில் காலம் நீடிப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டு வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இறுதி இயந்திர மாதிரியானது தள பரீட்சிப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அது மீள பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அவதானிக்கப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்து சந்தைக்கு பொருத்தமான உபகரணங்களாக நிறைவு செய்து ஆராய்ச்சியினை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. | உரிய காலத்தினுள் ஆராய்ச்சி பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்டம் நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2017 சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் மாதம் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 960,000 மதிப்பிடப்பட்ட 05 சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டு 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றுப்பாதைகளை மீண்டும் திட்டமிடப்பட்டு ஆராய்ச்சியினை மீண்டும் ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஈடுபடுத்துவதற்கும், கொள்வனவுகளை மேற்கொள்வதற்கும் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் விலகல்களின் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டன. | செயற்திட்டத்தினை துரிதமாக நிறைவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |